**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

D.W.–1

O.S.No.122/2021

2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.கே.ஆர். கண்ணன், பி.ஏ., பி.எல்., கூடுதல் சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு. பாலசுப்பிரமணியம் | வயது:62 |
| த/பெ. : திரு. ராயப்பன் | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

வாதி ஆஜர் இல்லை. பிரதிவாதி ஆஜர். வாதி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். தாவாவில் நான் பிரதிவாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| 02.05.2019 – பிரதிவாதிக்கு வாதி ஏற்படுத்திக்கொடுத்த பதிவு ஏற்பட்ட அடமான பத்திரம் | அசல் | **பி.வா.சா.ஆ 1** |
| 02.12.2020 – பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு | அலுவலக நகல் | **பி.வா.சா.ஆ 2** |
| 05.12.2020 வாதி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை | அசல் | **பி.வா.சா.ஆ 3** |
| 30.12.2020 – வாதி பிரதிவாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு | அசல் | **பி.வா.சா.ஆ 4** |

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

வாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d.கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.